## தொண்டர்கள்:

வீட்டு நூலக சேவை,தனிப்பட்ட வீட்டு நூலக கடன் வாங்குபவர்களுக்கு, சாதனங்களைத் தெரிவு செய்யவும், ஒப்படைக்கவும், தொண்டர்களின் உதவியில் தங்கியிருக்கிறது.

உங்களுக்கு ஒரு மிகவும் அவசியமானதும், நன்றாகப் பயன்படுத்தப்படும் சேவைக்கு உதவி செய்ய ஒரு சிறிய அளவு நேரத்தை ஒதுக்க ஆர்வம் இருந்தால், தயவு செய்து இயலாமை உள்ளோருக்கான நூலகரைத் தொடர்பு கொள்ளவும்.

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த வேறு எவரும் வீட்டு நூலக சேவையைப் பற்றி ஆர்வப்பட்டால் நீங்கள் இயலாமை உள்ளோருக்கான நூலகரை 9840 9919 இல் தொடர்பு கொள்ளத் தயங்கவேண்டாம். அவர்கள் உங்கள் விசாரணையை மிகவும் மகிழ்ச்சியாக வரவேற்பார்கள்.



## ஹொல்றோய்ட் நகர கவுன்சில் நூலக சேவை

### மெரிலான்ட்ஸ் மத்திய நூலகம்

Cnr. Miller and Newman Streets
Merrylands
தொலைபேசி: 9840 9960
TTY: 9840 9983

**நேரங்கள்:**

| | |
|---|---|
| திங்கள் – வெள்ளி | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மாலை 4.00 |
| ஞாயிற்றுக்கிழமை | மாலை 2.00 – மாலை 5.00 |

### கிறேய்ஸ்டேன்ஸ் கிளை நூலகம்

732 Merrylands Road
Greystanes
தொலைபேசி: 9636 4160

**நேரங்கள்:**

| | |
|---|---|
| திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி | காலை 9.30 – மாலை 5.30 |
| வியாழன் | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மதியம் 12.00 |

### வென்ட்வேர்த்வீல் கிளை நூலகம்

(ஹொல்றொய்ட் பொம்மை நூலகம் உட்பட)
2 Lane Street
Wentworthville
தொலைபேசி: 9631 7564
பொம்மை நூலகம்: 9896 0083

**நேரங்கள்:**

| | |
|---|---|
| திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி | காலை 9.30 – மாலை 5.30 |
| வியாழன் | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மதியம் 12.00 |

TAMIL - Home Library

Holroyd City
*Built Around People*

# வீட்டு நூல்நிலைய சேவை

நூல்நிலையத்திற்கு வர இயலாமல் இருக்கிறதா?



நூல்நிலையம் உங்களிடம் வர விடுங்கள்!

## வீட்டு நூல்நிலைய சேவை:

ஹொறொய்ட் நகரக் கவுன்சில் நூல்நிலையச் சேவை ஹொல்றொய்டில் வசிக்கும் வயது, சுகயீனம் அல்லது இயலாமை ஆகிய காரணங்களுக்காக நூல்நிலையத்தை தாமாக–வே தரிசிக்க இயலாதவர்களுக்கு ஒரு மனமுவந்ததும் சினேகபூர்வமானதும் மற்றும் இலவசமான வீட்டு நூல்நிலையச் சேவையை வழங்குகிறது.



## எப்படிச் சேர முடியும்?

எளிதாக இயலாமை உள்ளோருக்கான நூலகரை 9840 9919 இல் தொடர்பு கொண்டு ஒரு விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யவும். ஆளுக்குரிய விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும். நீங்கள் எப்படியான மற்றும் எத்தனை பொருட்கள் இரவல் வாங்க விரும்புகிறீர்கள் என்று கேட்பார்கள். ஒரு ஒப்படைக்கும் நேரம் உங்களுக்கு ஒழுங்கு செய்யப்படும்.
ஒரு வைத்தியரின் சான்றிதழின் மூலப்படிவம் இச் சேவைக்கு கொடுக்கப்படவேண்டும்.




## நீங்கள் எவற்றை இரவல் வாங்கலாம்?

வீட்டு நூல்நிலையச் சேவை வீட்டு நூல்நிலைய அங்கத்தவர்களுக்கு பின்வரும் பொருட்களை ஒரு மாத காலத்திற்கு இரவல் வழங்கும்:

- பெரிய எழுத்துப் புத்தகங்கள்
- சாதாரண எழுத்துப் புத்தகங்கள் (கற்பனை/உண்மையான)
- கதைக்கும் புத்தகங்கள்–கசட்கள் மற்றும் சீடீக்கள்
- ஒளிப் பேழைகள்
- சஞ்சிகைகள்
- சீடீக்கள்
- டீவீடீக்கள்
- சீடீ–றோம்கள்

இயலாமை உள்ளோருக்கான நூலகர் வீட்டு நூலக அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டிய விருப்புகளுக்கு ஏற்றவாறு இந்தப் பொருட்களைத் தெரிவு செய்வார்.

மருத்துவமனைகள், ஓய்வு பெற்றோர் இல்லப் பகுதி, முதியோர் கவனிப்பு மையங்கள், மற்றும் மூத்த பிரஜைகள் சங்கங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு தொகையான இரவல்களும் கிடைக்கும்.

## பொருட்களை ஒப்படைத்தல்

பொருட்களைப் பின்வருபவர்கள் ஒப்படைக்கலாம்:

- இயலாமை உள்ளோருக்கான நூலகர்
- ஒரு குடும்ப அங்கத்தவர் அல்லது நண்பர்

அல்லது

- ஒரு தொண்டர்